உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. அதன் பங்குத் தொகையாக 4,210 ரூபாய் கொண்டு தொடங்கப்பட்டது. சமீபகாலத்திலே பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களுக்குச் சென்ற காரணத்தால், தற்போது வெறும் 33 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கும் காரணத்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கம் நலிவு அடைந்திருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நடைமுறை மூலதனத்தை அதிகப்படுத்துவதன் மூலம், மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து, இதுபோன்ற நலிவு அடைந்த சங்கங்களை நாங்கள் விரிவாக்கம் செய்யும்பொருட்டு, வாரியமானது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

357—

வேதாரண்யம் தொகுதியில், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிக் கடன்களை ரத்து செய்தல்

22761—திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1992-93 ஆம் ஆண்டு வேதாரண்யம் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கியில் உள்ள கடன் பாக்கி ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. பா. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரத்து செய்ய இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. கவன ஈர்ப்பு.

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள சில பாலங்களைப் பதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கே. செல்வராஜ்.